# தமிழ் ஈழத்தை நோக்கி மாவீரர்

அப்பு ஆச்சி - 'யாழன்' இரா. சண்முகலிங்கம்

குடும்பம் குமுகம் இனம் நாடு இவையாவும்
பெருகிப் படர்ந்து பெருவாழ்வு வாழ வேண்டின்
வேண்டும் தாய் தந்தை மகன் மகள் மற்றும்
அரசு மக்கள் தத்தம் சேவையை நிறை செய்தல்.

பொன்முடியார் சங்கப் பெண் பாடினியார்:
"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"

தமிழரில்லா நாடில்லைத் தமிழுக்கு ஒரு நாடில்லை
அரசில்லாத் தமிழ் காக்கத் தமிழர் கூட்டொருமையே!
1887 இல் கலித்தொகை பதிப்பித்துத் தமிழ் காத்த சி. வை.தா.
வழிவந்த வே. பி. 1987 இல் தமிழ்க் கலி துடைக்கும்
தவப் புதல்வன் என்றால் மறுப்பேன் என்பார் யாருளர்?
தமிழை மற ஏனவை நினை என்போர் காட்டிக் கொடுப்போரே!

நடைகாலக் கவி, பெருங்கவி வா.மு. சே இறைஞ்சுவது:
"தமிழா கட்சியை மற தமிழை நினை
தமிழா சாதியை மற தமிழை நினை
தமிழா மதத்தை மற தமிழை நினை."

சங்க இலக்கியத்தைப் பதிப்பிப்பதில் உ. வே. சா.
ரா. இ. மற்றும் தி. சௌ. அ போன்ற அறிஞர்கள்
பட்ட துன்பம் சொற்கடங்கா நன்றிக்கு ஒடுங்கா
எங்க தமிழ் மானம் காக்க எழுந்த புலி வீரர் பட்டது
துன்பம் மட்டுமா? தம்தம் உயிரையே பணயம் வைத்து
மாண்ட வீரர் மாவீரர் மீண்ட வீரர் மகா ச்ஊரர் அம்மா!

'தமிழ்க் காதல்' நூல் இழைத்த வ. சுப. மாணிக்கம்:
"பார் காத்தார் ஆயிரம் பேர், பசித்தார்க் காகப்
பயிர்காத்தார் ஆயிரம் பேர் - பாலர்க் காக
மார்காத்தார் ஆயிரம்பேர் வாழ்ந்த நாட்டில்
மனங்காத்தா தமிழ்த்தாய் 'என் உடைமையெல்லாம்
யார் காத்தார்' எனக் கேட்க, ஒருவன் "அம்மா
யான் காப்பேன்" எனவெழுந்தான் சாமி நாதன்
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சின் உள்ளான்
நிலைகாத்த மலையிமய நேற்றி மேலான்"

தமிழ்க் காதல் நோயால் இளைத்த இரா. சண்முகம்:
\பார்த்தார் ஆயிரமாயிரம் பேர், காலிமுனைத் தடலில்
சிங்களக் காடையர் தமிழன்னையின் துயிலுரிய
காத்தாரா தமிழ் மானம்? கேட்டார சிங்கள அரசை?
"நெல்லும் உயிரன்றே நீ ரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யான் உயிர் என்பது அறிகை
வேன்மிகு தானை வேந்தர்க்குக் கடனே"என்று
அன்று பாடிய மோசிகீ ரனார் இன்று இருந்தால்:

வாழும் நாம் கொல்லும் அரசை ஏற்கலாமா?
மக்களாட்சி யென்ற மகுடியை ஊதி
மக்களைப் பெட்டிப்பாம்பென மாற்றி
கெட்டிக்காரரென்று கேடிகள் ஆட்சி
எட்டி உதைக்கும் காலம் இக்காலம்
போரை நிறுத்த உலக மகாபோர் ஒன்று
அதை மிஞ்சிய உலகப் போர் இரண்டு
போட்டது அமெரிக்கா அணுகுண்டு

அதுபோல் அமைதிக்குப் போர் என்று
போரிடாத சந்திரிகாவுக்குப் போரினிமை
ஆவதினால் அமைதிக்கு இடையூறாய்
மறத் தமிழரை அவதூறுசெய்து உலக
நாடுகளைக் கூட்டித் தமிழை ஒழிக்கப்
போட்ட திட்டம் அவள் கொட்டம் அடங்கியதா?

தமிழர் நிலங்களில் சிங்களக் குடியேற்றம்
அவரைக் காக்கச் சிங்களப் படை யாட்டம்
பொறுக்குமா மறத் தமிழர் இளசு மனம்?
தமிழ் மண் காக்க எடுப்போம் ஆயுதம்
தொடுப்போம் தலைமறவுக் கெரில்லாப் போர்
தமிழ் மக்கள் ஆதரவோடு தேசிய இயக்கம் காண்போம்.

தமிழீ ழ விடுதலைப் புலிகளின் வீ ர வரலாறுதான்
தமிழர் புரட்சிகர விடுதலைப் போர் வரலாறு
சிங்களப் பேரினவாதப் படைப் பலம்
தமிழரை ஒடுக்கும் பேயெண்ணம்
உண்ணாநோன்புகள் அமைதி வழிகள்
கொடுத்ததுணிச்சல் தமிழரின் எரிச்சல்
இளைஞரின் ஒழுங்கும் கட்டுப்பாடும் உறுதியும்
முதலிடம் கொடுத்து தமிழ் காக்க விரதம் பூண்ட
தனித் தலைவன் பிரபாகரன் இன்று படைப்
பலத்தாலே பேச்சுவார்த்தையைச் சரி சம நிலையில்
பல்லில்லாத இரணிலின் அரைகுறைச்சிங்கள அரசும்,
மூளையில்லாத மிகுதித் தலைமையும் அமைதி
அடைவாரா அல்லது கெடுதி விளைப்பாரா?

சேரமான் கணைக்கால் இரும்பொறை பாடால்:
"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்
ஆளன்று என்று வாளில் தப்பார்."
பிறப்பெடுத்த போதே வீ ரத்தைப் போற்றும் தமிழன்
இறந்துபிறந்த குழந்தையும் ஊனச் சிசுவும்
வீ ர மரணக் குறியாக வாளால்க் கீ றிப் புதைக்கும்
மறவர் இனம் அன்னிய மொழிக் கலவா அறிவு
தம்பிக்குக் கிடைத்த பெருவாய்ப்பு தமிழுக்கு விடிவு

வீ ம்புக்கோ பொழுது போக்குக்கோ ஆயுதம் அல்ல
தமிழர் இழந்த உரிமை மீ ட்க ஆயுதம்தாங்கல்
மண்ணாசையுடைய சிங்களர் அஞ்சுமாறு நல்லறம்
கருதும் பிரபாகரன் வீ ரப்புலிகளைத் தயார்பண்ணி
மக்களுடன் வாழ்ந்து அவர்களோடு முகம் கொடுத்து
அவர்களின் சுக துக்கங்களில் பங்கு கொண்டு தேசியப்
போராட்டத்தை நடத்தி அமைதியை நாடியது
"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்றே" என்ற
தொல்காப்பிய இலக்கணத்துக்கு அடங்கிய போர்
இதைப் பயங்கரவாதம் என்று சொல்லும் அறிவிலிகளுக்கு
இதோ அப்புஆச்சியின் சொல் மருந்து :

பாட்டுப் புலவன் பாரதி அறிந்த இனிய மொழி தமிழ்
நாட்டுப் பாமரர் தமிழ்த் தாரணிப் பாமரர் எமது அமிழ்
கேட்டுப் பார்த்துப் படித்துக் கண்டு மகிழும் அறிவுக்கமழ்
ஊட்டும் அறிவூட்டும் ச்ஊழ் கலை தவழ் மிகு தவழ்
பெட்டகம் தமிழ் என்றும் நிலைக்கும் எம் செறி இதழ்
காட்டும் திருக்குறள் வழி கொண்டு அறியாமை அவிழ்!